(c) whether Basic Trained Teachers are appointed in the Basic schools?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) 3,104.

(b) In the Basic School teaching is correlated to purposeful practical activities as expressed in productive craft work. In the non-Basic School there is no emphasis on such correlation.

(c) Yes Sir.

சாலைகள் பராமரிப்பு (தென்னார்க்காடு மாவட்டம்)

* 941 கேள்வி.—**திரு. கு. கோபால கவுண்டர் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு ஜில்லாவில் **1953-54-ம்** வருஷம் ரயில்வே செஸ் நிதியிலிருந்து எவ்வளவு ரோட்டுகளுக்கு நிதி கொடுக்கப்பட்டது ;

(இ) எவ்வளவு தொகைக்கு காண்ட்ராக்ட் விடப்பட்டது ;

(உ) எவ்வளவு தொகை நில ஆர்ஜிதத்திற்கு ஒதுக்கப்பட்டது ;

(எ) மேலே கண்ட அயிட்டங்களுக்கு நாளது வரை செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Twenty road works involving a sum of Rs. 3,42,500.

(b) Rs. 2,67,045.

(c) Rs. 75,455.

(d) Rs. 2,15,109.

Pre-University Examination (March 1962)

* 942. Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the number of candidates who appeared for the Pre-University Course Examination in March 1962; and

(b) what percentage was declared eligible for further studies?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) 18,909 candidates appeared for the Madras University Examination and 424 for the Annamalai University Examination.

(b) 46.5 per cent were declared passed by the Madras University and 58 per cent by the Annamalai University.

திரு. மீ. கலியாணசுந்தரம் : பரிட்சையில் தேருதவர்களுடைய சதவிகிதம் குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன என்று அரசாங்கம் ஆராய்ச்சி செய்ததா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒரு காரணம் ப்ரீ-யுனிவர்ஸிடி பாடதிட்டம் சரியாக இல்லையென்பது. அதை மாற்ற வேண்டுமென்ற அபிப்பிராயம் இருக்கிறது. அதைச் சென்னைப் பல்கலைக் கழகம் ஏற்றுக்கொண்டு உடனடியாக மாற்றவும் உத்தேசித்திருக்கிருர்கள்.

திரு. ஜே. மாதா கவுடர் : எஸ்.எஸ்.எல்.ஸி. படித்துவிட்டு நேராகக் காலேஜுக்கு வருகிறவர்கள் ஒரு ஆண்டு படித்தவுடனேயே ப்ரீ-யுனிவர்ஸிடி பரீட்சை எழுத வேண்டியிருப்பதுதான் இந்தச் தேர்ச்சிக் குறைவுக்குக் காரணமாக இருக்கலாம். முன்பு இண்டர்மிடியட் 2 வருஷப் படிப்பாக இருந்ததுபோல இப்போதும் இந்த ப்ரீ-யுனிவர்ஸிடியை இரண்டு வருஷப் படிப்பாகச் செய்வார்களா ?

30th October 1962]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இண்டர்மிடியட் என்றாலும், ப்ரீ-யுனிவர்ஸிடி என்றாலும் பெயரில் தான் வித்யாசம். பழைய பெயரையே வேண்டுமானாலும் கொடுத்துவிடலாம். ஆனால் இப்போது ஏற்பட்டுள்ள கஷ்டத்திற்கு முக்கியமான காரணம் ஆங்கிலத்தைச் சின்ன வகுப்பிலிருந்து சொல்லிக்கொடுப்பதை நிறுத்தியதுதான். மூன்றாவது வகுப்பிலிருந்து முன்பு சொல்லிக் கொடுத்து வந்ததை இரண்டாம் பாரத்திற்கு என்று ஏற்றி விட்டார்கள். அதனால்தான் தரக் குறைவு ஏற்பட்டது. என்னுடைய சொந்த அபிப்பிராயம் கல்வி நிபுணர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் கொஞ்சம் ஆங்கிலத்திலும் சொல்லிக் கொடுக்கலாம். அதுபோல ப்ரீ-யுனிவர்ஸிடியில் ஆங்கிலத்தில் சொல்லிக் கொடுக்கும்போது தமிழிலும் அங்கங்கே சொல்லிக் கொடுத்து விளக்கலாம். தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட ஆசிரியர்களால் இது முடியும். இப்போது சிறிய வகுப்பில் இருந்தே ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கத் துவங்கிவிட்டதால் கஷ்டம் கொஞ்சம் கொஞ்சமாகத் தீர்ந்துவிடும்.

திரு. ஜே. மாதா கவுடர்: கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய கேள்வி, முன்பு இண்டர்மிடியட் கோர்ஸை இரண்டாண்டுகள் வைத்திருந்ததுபோல, இந்த ப்ரீ-யுனிவர்ஸிடி கோர்ஸை இரண்டாண்டுகளாக்க ஏற்பாடு செய்வார்களா என்பது.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அப்படிச் செய்வதற்கில்லை. முன்பு இண்டர்மிடியட் 2 வருஷப் படிப்பாக இருந்தபோது, பட்டப் படிப்பு 2 வருஷங்களாக இருந்தது. இப்போது பட்டப் படிப்பை 3 ஆண்டு என்று செய்திருக்கிறார்கள். அகில இந்தியாவிலும் பட்டப் படிப்பு 3 ஆண்டு இருக்க வேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. பட்டப் படிப்பு 3 ஆண்டுகள் என்று இருப்பதுதான் போஸ்ட்-கிராஜுவேட் கோர்சுக்குப் பயன்படுகிறது. இது நிபுணர்களுடைய கருத்து. உயர்நிலைப் பள்ளிப் படிப்பு 11 ஆண்டு, ப்ரீயுனிவர்ஸிடி 1 ஆண்டு, பட்டப் படிப்பு 3 ஆண்டு என்றால் பட்டம் பெறுவதற்கு 15 ஆண்டுகள் ஆகின்றன. ப்ரீ-யுனிவர்ஸிடி படிப்பை 2 ஆண்டாக்கி மொத்தம் 16 ஆண்டு பட்டம் பெறுவதற்கு என்று செய்வது சரியல்ல. 15 ஆண்டுகளுக்குக் குறைவாகவும் செய்ய முடியாது. மேலும் அதிகப்படுத்துவதற்கில்லை. ஆகவே ப்ரீ-யுனிவர்ஸிடி படிப்பை 2 ஆண்டு என்று செய்வதற்கில்லை என்று நான் கருதுகிறேன்.

திரு. சா. கணேசன்: ப்ரீ-யுனிவர்ஸிடி பரீட்சையில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தேர்ச்சி பெற்றிருப்பவர்கள் 46.5 சதவீதம் என்றும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தேர்ச்சி பெற்றிருப்பவர்கள் 58 சதவீதம் என்றும் கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதிலே மாணக்கர்களுடைய சதமானம் எவ்வளவு? மாணக்கியர்களுடைய சதமானம் எவ்வளவு என்று சொல்ல முடியுமா? (சிரிப்பு)

கனம் திரு. எம். பக்தவத்சலம்: என்னிடம் அதைப்பற்றிய புள்ளி விவரம் இல்லை. மாணக்கியரோ, மாணவிகளோ—இவர்களுடைய சதவிகிதம் மாணவர்களுடைய சதவிகிதத்தைவிட அதிகமாகத்தான் இருக்கும். மாணவிகள் தங்கள் கவனத்தைச் சிதறவிடாமல் படிக்கிறார்கள். மாணவர்கள் அம்மாதிரி படிப்பது இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம்: எஸ்.எஸ்.எல்.ஸி. வரை தமிழில் பரீட்சை எழுதிவிட்டு திடீரென்று பி.யு.ஸி.இல் ஆங்கிலத்தில் பரீட்சை எழுத வேண்டியிருக்கிற கஷ்டத்தின் காரணமாக அதிகமான மாணவர்கள் தேறமுடியவில்லை என்பதை அரசாங்கம் உணருமா? பி.யு.ஸி. வகுப்புகளில் தமிழில் பாடங்களைப் போதிப்பது மட்டுமின்றி, மாணவர்கள் விரும்பினால், தமிழிலேயே பரீட்சை எழுதுவதற்கும் வசதி செய்து கொடுக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் முன்பு குறிப்பிட்டதுபோல், ஆங்கிலம் சொல்லிக் கொடுப்பதைக் கீழ் வகுப்புகளிலேயே ஆரம்பித்து

[30th October 1962

விட்டால் இந்தத் தொல்லைகளெல்லாம் அனேகமாகத் தீர்ந்துவிடும் என்று நான் கருதுகிறேன். அதற்கு மேலே என்ன மாறுதல் செய்யவேண்டும் என்பதைக் குறித்து பின்னர்தான் யோசிக்கவேண்டும்.

மேலப்பாளையம் நகரசபை

*** 943 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் நகராட்சி நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மேலப்பாளையம் நகரசபையிலிருந்து நகரசபையின் வருமானம் மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், நகரத்திற்கு வசதிகள் செய்துகொடுக்கும் பொருட்டு மானியம் கேட்டு தீர்மானம் ஏதாகிலும் அரசாங்கத்திற்கு வந்ததா ;

(இ) ஆமெனில், அதன்மேல் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) இல்லை, ஐயா.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Rural electrification

* 944. *Q.*—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of villages where electric supply has not been provided;

(*b*) when will the scheme for rural electrification be given effect to in all the villages; and

(*c*) how many villages in Bhavani Constituency have not yet been provided with electric supply?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) 6,200 as on 1st April 1962.

(*b*) By the end of the Third Five-Year Plan.

(*c*) Twenty villages.

* 945. *Q.*—Sri M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to extend the supply of electricity from Pennagaram to Perumbalai in Salem district : and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) A scheme costing Rs. 3,43,200 has been sanctioned by the Madras State Electricity Board for extension of Electricity to Kalapambadi Chinnampalli and Perumbalai villages. This scheme which is expected to be completed by the end of this financial year will benefit 120 agricultural, 3 industrial and 46 domestic loads and also supply power to 75 street lights.

பெண்கள் நல இலாகா

***946. கேள்வி—திரு. முனு ஆதி :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா ;

1962–63–ல் செங்கற்பட்டு மாவட்டத்தில் எத்தனை பெண்கள் நல இலாகா **(Women's Welfare Branch)** ஏற்படுத்த உத்தேசம் ?